தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 23, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 மே 6, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை."

உயர்வு, உறுதியான ஊக்கம் உடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்.

1. தகவல் கோரல்

அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இன்றைக்கு எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, எதுவும் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களால் *5-5-2003* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் *13*, எரிசக்தித் துறை, மானியக் கோரிக்கை எண் *26*, தொழில் துறை மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவைமீது விவாதமும், வாக்கெடுப்பும். திரு. எச். ராஜா. *(குறுக்கீடுகள்)* இல்லை, இன்றைக்கு எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. எதுவும் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. மானியக் கோரிக்கைகள்

மூன்று இருக்கின்றன. (குறுக்கீடுகள்) எதுவும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. திரு எச். ராஜா அவர்கள்.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, தயவுசெய்து அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்லுங்கள். Let the Minister answer this question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, வேறு எதுவும் எடுத்துக் கொள்வதாக இல்லை. ராஜா பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதேமாதிரி எல்லோரும் சொல்வதும் முக்கியமானதுதான். மணி சொல்வதும் முக்கியமானது; கணேசன் சொல்வதும் முக்கியமானது; பழனிசாமி சொல்வதும் முக்கியமானது. திரு. ராஜா, பேசுங்கள்.

திரு எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், வேறு ஏதாவது இது சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். ஒரு சிறிய விளக்கம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) ஞானசேகரன், இதை உங்கள் மகனிடம் சொல்லுங்கள்; மந்திரியிடம் சொல்லாதீர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதிலே என்ன நிலைமை என்பதையாவது இப்போது விளக்கிவிட்டார் என்றால், அதுகூடப் போதுமானதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதை மட்டும் அமைச்சர் அவர்கள் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற மருத்துவப் பயிற்சி மாணவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் சாலைகளிலே அமர்ந்து போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்த காரணத்தினாலே, காவல் துறையினரால் அவர்கள் அப்புறப்படுத்தப்

பட்டார்கள். நேற்றையதினம் அவர்களை, இராஜரத்தினம் ஸ்டேடியத்திற்குக் கொண்டு சென்று, அவர்களைக் கலைந்து செல்லுமாறு சொல்லியும், அவர்கள் எங்களைக் கைதுதான் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்தி, கலைய மறுத்துவிட்டார்கள். எனவே, இரவு 12 மணிக்கு மேல் அவர்களைக் கைது செய்ய வேண்டிய கட்டாயம் காவல் துறைக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் அன்று இரவே Magistrate முன்னாலே ஆஜர்படுத்தப்பட்டு, Magistrate அவர்கள், அவர்களிடம், நீங்கள் உங்களுடைய சொந்த ஜாமீனில் போகலாம் என்று சொல்லி, அதை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு, அவர்கள் போய்விட்டார்கள். இதுதான் இப்போது இருக்கிற நிலைமை. அதற்கு மேலே இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை.

2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 20—தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், போதும், திரு. ராஜா, பேசுங்கள்.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தி மற்றும் தொழில் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி அளித்த பேரவைத் தலைவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜா, பேசுங்கள் (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. அதற்கு மேலே அனுமதிக்கவில்லை, அவர் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார். கேட்டதற்கு, என்ன நிலைமை இருக்கிறது என்பதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, open the hostel atleast.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....